அப்போலோ எலும்பியல் சிறப்பு நிபுணர் 18ம் தேதி புதுச்சேரி வருகை

புதுச்சேரி, அக். 16–

சென்னை அப்போலோ மருத்துவனையின் எலும்பியல் சிறப்பு நிபுணர், வரும் 18ம் தேதி புதுச்சேரி அப்போலோ மருத்துவமனை தகவல் மையத்தில் ஆலோசனை வழங்குகிறார்.

சென்னை அப்போலோ மருத்துவமனையின் எலும்பியல் சிறப்பு நிபுணரான டாக்டர் ஜெயமூர்த்தி, வரும் 18ம் தேதி ஞாயிற்றுக்கிழமை, புதுச்சேரி, எல்லைப்பிள்ளை சாவடி, என்.டி.மஹால் எதிரில், 100 அடி ரோடு, எண்: 60, இயங்கி வரும் அப்போலோ மருத்துவ மனை தகவல் மையத்தில், காலை 10:00 மணி முதல் மதியம் 1:00 மணி வரை மருத்துவ ஆலோசனை வழங்குகிறார்.

அதில் மூட்டுவலி, இடுப்பு வலி, இடும்பு மற்றும் மூட்டு மாற்று அறுவை சிகிச்சை, எலும்பு சம்பந்தப்பட்ட அனைத்து பிரச்னைகளுக்கும் தகுந்த மருத்துவ ஆலோசனை பெறலாம்.

டாக்டர் ஜெயமூர்த்தியை சந்தித்து ஆலோசனை பெற 0413–4901083, 99446 63139, 82487 53248 என்ற மொபைல் எண்ணில் தொடர்பு கொண்டு முன்பதிவு செய்யலாம்.

தொழிலதிபரிடம் பண மோசடி வழக்கு கேரளாவில் பதுங்கியிருந்த தம்பதி கைது

புதுச்சேரி, அக். 16–

புதுச்சேரி, தொழிலதிபரிடம் ரூ. 2 கோடி பண மோசடி வழக்கில், கேரளாவில் தலைமறைவாக இருந்த தம்பதியை சி.பி.சி.ஐ.டி., போலீசார் கைது செய்து, ரூ.16.50 லட்சம் பணத்தை பறிமுதல் செய்தனர்.

புதுச்சேரி, லாஸ்பேட்டையை சேர்ந்த தொழிலதிபர் வெங்கடேஷை தொடர்பு கொண்ட கும்பல், ஒரு கோடி ரூபாய் கொடுத்தால் மூன்று மணி நேரத்தில் பணத்தை இரட்டிப்பாக்கி தருவதாக ஆசை வார்த்தை கூறியது.

இதை நம்பிய வெங்கடேஷ், நண்பர் மகேஷூடன் சென்று, ரூ.2 கோடியை கடந்த மாதம் 29ம் தேதி டி.ஆர்.நகரில் வைத்து பார்த்தசாரதி, முகமது ரபீக் ஆகியோரிடம் கொடுத்தார்.

அப்போது அங்கிருந்த சிலர் பணம் இருந்த பையை பறித்துக் கொண்டு தப்பினர். அதில் சிலரை மடக்கி பிடித்து, பணத்தை சரிபார்த்த போது, ரூ. 88 லட்சத்தை காணவில்லை. இதுகுறித்து வெங்கடேஷ் உருளையன்பேட்டை போலீசில் அளித்த புகாரின் பேரில், 8 பேரை கைது செய்து, ரூ. 39 லட்சத்தை பறிமுதல் செய்தனர்.

ரூ. 49 லட்சத்துடன் தப்பியோடியவர்களை தேடி வந்தனர்.

இந் நிலையில், இந்த வழக்கு சி.பி.சி.ஐ.டி.,க்கு மாற்றப்பட்டு, இன்ஸ்பெக்டர் கண்ணன் தலைமையிலான போலீசார் தீவிர விசாரணை நடத்தினர்.

இதில், பணத்தை எடுத்துச் சென்ற கோபாலன் கடை வடிவேல் மகன் ஸ்டாலின்,30; பணத்தை வைத்திருந்த புதுச்சேரி பெரியார் நகர் தவமணி மகன் சிகாமணி,36 ஆகியோரை கைது செய்தனர்.

இந்த வழக்கில் இது வரை 10 பேர் கைது செய்யப்பட்ட நிலையில், அவர்களிடம் இருந்த மோசடி செய்யப்பட்ட தொகையில் ரூ.1 கோடியே 51 லட்சம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

சித்ராதேவி

அறிவுமணி

வழக்கில் தொடர்புடைய அறிவுமணி, 45; அவரது மனைவி சித்ராதேவி, 43; ஆகியோர் கேரள மாநிலம் வயநாட்டில் பதுங்கி இருப்பதாக வந்த தகவலின் பேரில், தனிப்படை போலீசார் கேரளா விரைந்து சென்று இருவரையும் கைது செய்தனர். அவர்களிடம் இருந்து ரூ.16 லட்சத்து 50 ஆயிரம் பணத்தை பறிமுதல் செய்தனர்.

இந்த வழக்கில் இது வரை 12 பேரை கைது செய்த போலீசார் மொத்தம் ரூ.1 கோடியே 67 லட்சத்து 50 ஆயிரம் பறிமுதல் செய்துள்ளனர்.

இவ்வழக்கு சி.பி.சி.ஐ.டி., மாற்றப்பட்ட 10 நாட்களுக்குள், ஒரு வழக்கறிஞர் உட்பட 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். வழக்கில் தொடர்புடைய சென்னையை சேர்ந்த ரோஷலின், திருவண்ணாமலையை சேர்ந்த ஒருவரையும் போலீசார் தேடி வருகின்றனர்.

விவசாயி வீட்டில் நகைகள் திருட்டு

மயிலம், அக்.16–

மயிலம் அருகே விவசாயி வீட்டில் நகைகள் திருடிய மர்ம நபர்களை போலீசார் தேடி வருகின்றனர்.

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் அடுத்த முப்புலி கிராமத்தை சேர்ந்தவர் சுகுமார், 65; விவசாயி. இவர், நேற்று முன்தினம் இரவு வீட்டின் வராந்தாவில் படுத்து துாங்கினார்.

இவரது மனைவி பூங்கோதை, 60; மற்றும் குடும்பத்தினர், உள்ளே அறையில் துாங்கினர். நள்ளிரவு வந்த மர்ம நபர்கள், மற்றொரு அறையில் இருந்த பீரோவை திறந்து, அதிலிருந்த 3 சவரன் தங்க நகைகள், 110 கிராம் வெள்ளி பொருட்களை திருடி சென்றனர்.

இது குறித்து, சுகுமார் அளித்த புகாரின் பேரில், மயிலம் போலீசார் வழக்கு பதிந்து, மர்ம நபர்களை தேடி வருகின்றனர்.

ரேஷன் அரிசி பதுக்கியவர் கைது

கோட்டக்குப்பம், அக்.16–

விழுப்புரம் மாவட்ட உணவு கடத்தல் தடுப்பு பிரிவு போலீசார் நேற்று வானுார் அடுத்த மென்னையம்பேட்டை பகுதியில் உள்ள ஒரு கடையில் அதிரடி சோதனையில் ஈடுபட்டனர் அப்போது அந்த கடையில் 12 மூட்டைகளில் 700 கிலோ ரேஷன் அரிசி பதுக்கி வைத்து இருந்ததை கண்டுபிடித்தனர்.

கடையின் உரிமையாளர் ஜோசப் விஜி, 48; என்பவரிடம் நடத்திய விசாரணையில், அதே பகுதியில் உள்ள ரேஷன் கடைகளில் அரிசியை வாங்கி அதனை இட்லி மாவு தயாரித்து பொதுமக்களுக்கு கூடுதல் விலைக்கு விற்பனை செய்து வந்தது தெரியவந்தது. அவரை கைது செய்த போலீசார் 700 கிலோ ரேஷன் அரிசியை பறிமுதல் செய்தனர்.

‘மிரட்ட முடியாது’

3ம் பக்கத் தொடர்ச்சி

மூலம், எஸ்.ஐ.ஆர்., பணியில் நடந்ததாகக் கூறப்படும் முறைகேடுகள், தலைமை தேர்தல் கமிஷனர் ஞானேஷ் குமார் மற்றும் தேர்தல் கமிஷனுக்கு எதிராக மனு தாக்கல் செய்தனர்.

இந்நிலையில், அக்., 12ல் நடந்த பேரணியின்போது, உச்ச நீதிமன்ற வளாகம் அருகே பெரும் கூச்சல், குழப்பம் ஏற்பட்டது. அப்போது, செய்தி சேகரிக்க வந்த கர்ப்பிணி பத்திரிகையாளர் தள்ளி விடப்பட்டதாக புகார் எழுந்தது.

இதை தொடர்ந்து, நீதிமன்ற வளாகம் அருகே அரசியல் போராட்டங்கள் மற்றும் பேரணிகள் நடத்துவதற்கு, விரிவான வழிகாட்டுதல்களை உருவாக்கக்கோரி உச்ச நீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

தலைமை நீதிபதி சூர்யகாந்த், நீதிபதி ஜாய்மால்யா பக்சி அமர்வில் நேற்று, எஸ்.ஐ.ஆர்., நடவடிக்கைக்கு எதிரான போராட்டம், தலைமை தேர்தல் கமிஷனர் ஞானேஷ் குமாரை பதவி நீக்கும் கோரிக்கை, பத்திரிகையாளர்கள், வழக்கறிஞர்களை தாக்கியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகள், நீதிமன்ற வளாகம் அருகே போராட்டம் நடத்துவதற்கான வழிகாட்டுதல்கள் என, அனைத்து மனுக்களும் ஒன்றாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

அப்போது, லோக்சபா எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் தலைமையில் இண்டி கூட்டணி தலைவர்கள் அக்., 12ல் நடத்திய பேரணி, உச்ச நீதிமன்றத்தை அச்சுறுத்துவது போல இருந்தது என, வழக்கறிஞர்கள் சிலர் குற்றஞ்சாட்டி வாதாடினர்.

மேலும், மூத்த வழக்கறிஞரும், பா.ஜ., பிரமுகருமான கவுரவ் பாட்டியா, ''ராகுல் உள்ளிட்ட தலைவர்கள் வெளியிடும் கருத்துக்களும், நடத்தைகளும் கவலை அளிப்பதாக இருக்கின்றன,'' என தெரிவித்தார்.

இதற்கு பதிலளித்த தலைமை நீதிபதி சூர்யகாந்த், ''நீதித் துறையை யாரும் மிரட்டவோ, அடிபணிய வைக்கவோ முடியாது. நீதிமன்றத்திற்குள் அவர்கள் என்ன பேசுகின்றனர்; வெளியே இருக்கும்போது எப்படி பேசுகின்றனர் என்பதை நாங்கள் நன்கு அறிவோம். வெளி உலகில் என்ன நடக்கிறது என தெரியாத அளவுக்கு நாங்கள் ஒன்றும் மாடமாளிகையில் வசிக்கவில்லை; அனைத்தும் நன்றாக தெரியும்,'' என்றார்.

தொடர்ந்து, உச்ச நீதிமன்றம் நோக்கி பேரணி நடத்தியதற்கு எதிராக காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, அக்கட்சியைச் சேர்ந்த லோக்சபா எதிர்க்கட்சித் தலைவர் ராகுல், சமாஜ்வாதி தலைவர் அகிலேஷ் யாதவ், திரிணமுல் காங்., – எம்.பி., மஹுவா மொய்த்ரா மற்றும் காங்கிரஸ் கட்சி மீது நடவடிக்கை கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவுக்கு பதில் அளிக்கக்கோரி நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

நிபந்தனையற்ற மன்னிப்பு!

தேர்தல் கமிஷனர் ஞானேஷ் குமாரை பதவி விலகக்கோரி, கடந்த 10ம் தேதி கரப்பான்பூச்சி கட்சி, டில்லி ஜந்தர் மந்தரில் போராட்டம் நடத்த அழைப்பு விடுத்தது. அசம்பாவிதங்களை தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, அக்., 9 இரவு முதல், 10ம் தேதி இரவு வரை டில்லி மெட்ரோ ரயில் சேவை நிறுத்தப்பட்டது; இணையதள சேவைகளும் முடக்கப்பட்டன.

உச்ச நீதிமன்ற உத்தரவை மீறி, சேவைகள் முடக்கப்பட்டதாக நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடரப்பட்டது. இம்மனு நேற்று விசாரணைக்கு வந்தபோது, மத்திய உள்துறை செயலர் கோவிந்த் மோகன் நிபந்தனையற்ற மன்னிப்பு கோருவதாக தெரிவித்தார்.

சட்டம் – ஒழுங்கை பாதுகாக்கவே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் அவர் பிரமாண பத்திரம் தாக்கல் செய்துள்ளார்.

அதே போல், எஸ்.ஐ.ஆர்., பணிக்கு எதிராக ராகுல் உட்பட எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த ஒன்பது தலைவர்கள் தொடர்ந்த மனுவுக்கு பதில் அளிக்குமாறு, தேர்தல் கமிஷன் மற்றும் தலைமை தேர்தல் கமிஷனருக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டனர்.

அதே சமயம், மனுதாரர்களில் ஒருவரின் நடத்தை குறித்து, அடுத்த விசாரணையின்போது கேள்வி கேட்கப்படும் என நீதிபதிகள் தெரிவித்தனர். ஆனால், யார் அந்த மனுதாரர் என்பதை நீதிபதிகள் தெளிவாக கூறவில்லை.

தேர்தல் கமிஷனர்களுக்கு இடையே கருத்து வேறுபாடு நிலவியதாக வெளியான செய்தியை சுட்டிக்காட்டி, ஏ.ஐ.எம்.ஐ.எம்., தலைவர் அசாதுதீன் ஒவைசி தொடர்ந்த மனுவுக்கும் பதிலளிக்க தேர்தல் கமிஷனுக்கு நோட்டீஸ் பிறப்பிக்கப்பட்டது.

டில்லியில் ஜந்தர் மந்தரில் போராட்டம் நடத்துவதற்கான அங்கீகாரத்தை ரத்து செய்துவிட்டு, வேறு இடத்திற்கு மாற்றியதை எதிர்த்து தாக்கல் செய்த மனுவுக்கு பதில் அளிக்குமாறு மத்திய அரசு மற்றும் டில்லி போலீசாருக்கு உத்தரவிடப்பட்டது.

மூத்த போலீஸ் உயரதிகாரி ஒருவர் பாலியல் துன்புறுத்தலில் ஈடுபட்டதாக புகார் அளித்த பெண் பத்திரிகையாளருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கக்கூடாது என நீதிபதிகள் உத்தரவிட்டனர். மேலும், அக்., 12 பேரணியின்போது உச்ச நீதிமன்ற வளாகத்தில் கர்ப்பிணி பத்திரிகையாளரை, ராகுல் தள்ளிவிட்டதாக கூறப்படும் புகார் குறித்தும் மனு தாக்கல் செய்தால் பரிசீலிக்கப்படும் என நீதிபதிகள் தெரிவித்தனர்.

கல்வி செய்திகள் மற்றும் தகவல்களுக்கு...
www.kalvimalar.com

தமிழகத்தில்...

3ம் பக்கத் தொடர்ச்சி

தமிழகத்தில் நேற்று அதிகபட்சமாக, கரூர் மாவட்டம் தோகைமலை, மயிலாடுதுறை மாவட்டம் திருவெண்காடு பகுதிகளில் தலா, 11 செ.மீ., மழை பெய்துள்ளது.

தமிழக தெற்கு கடலோர பகுதிகள் முதல் ஒடிஷா கடலோர பகுதிகளுக்கு அப்பால், வடமேற்கு வங்கக்கடல் பகுதிகள் வரை காற்றழுத்த தாழ்வு பகுதி நிலவுகிறது.

இதனால், நீலகிரி, கோவை, தேனி, திண்டுக்கல், தென்காசி, மதுரை மாவட்டங்களில் இன்று இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் மிக கன மழை பெய்யலாம். இதற்கான 'ஆரஞ்ச் அலெர்ட்' விடுக்கப்பட்டு உள்ளது.

திருவள்ளூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் உள்ளிட்ட பல மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரியில் இன்று இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கனமழை பெய்யக் கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டமாக காணப்படும்; ஒரு சில இடங்களில் இடி, மின்னலுடன் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

ஏற்பாடுகள் தயார்!

அமைச்சர் செங்கோட்டையன் கூறியதாவது:

வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்வதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார். மக்களுக்கு இடர்பாடுகள் இல்லாமல், பொருள் சேதம் இல்லாமல், சாலைகளில் தண்ணீர் தேங்காமல், மின்சாரம் தடையில்லாமல் இருக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உள்ளது. சென்னையை பொறுத்தவரை, 15 மண்டலங்களுக்கும் உயர் அதிகாரிகள், பொறுப்பு அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கூறினார்.

பாகிஸ்தான் விமானிகளுக்கு தடை விதித்தது இஸ்ரேல்

பாரிஸ், அக். 16–

மேற்காசிய நாடான ஐக்கிய அரபு எமிரேட்சில் இருந்து, மற்றொரு மேற்காசிய நாடான இஸ்ரேலின் டெல் அவிவ் நகருக்கு சென்ற எமிரேட்சின் 'பிளை துபாய்' விமானத்தை கடத்தி மோத வைக்கும் முயற்சி சமீபத்தில் நடந்தது.

இதையடுத்து, இஸ்ரேலுக்கு வரும் விமானங்களில் பணியாற்றும் விமானிகள் மற்றும் பணியாளர்கள் இஸ்ரேலுடன் அதிகாரப்பூர்வ துாதரக உறவுகள் இல்லாத நாடுகளின் குடியுரிமையையோ அல்லது இரட்டை குடியுரிமையையோ கொண்டிருக்கக்கூடாது என, கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலின் புதிய கட்டுப்பாடுகளின் கீழ் வரும் 31 நாடுகளில் பாகிஸ்தானும் ஒன்று.

இக்கட்டுப்பாடுகளைத் தொடர்ந்து, இஸ்ரேலுக்கு இயக்கப்படும் விமானங்களில், பாகிஸ்தான் விமானிகள் மற்றும் விமான பணியாளர்கள் பணியாற்ற, ஐரோப்பிய நாடான பிரான்சைச் சேர்ந்த, ஏர் பிரான்ஸ் நிறுவனம் தடை விதித்து உள்ளது.

அமெரிக்க நிறுவனமான, 'யுனைடெட் ஏர்லைன்ஸ்' மற்றும் செக் விமான நிறுவனமான 'ஸ்மார்ட்விங்க்ஸ்' ஆகியவையும் இதுபோன்ற நடவடிக்கைகளை எடுத்து உள்ளன.

சிறுமிகளிடம் பாலியல் சீண்டல் தொழிலாளிக்கு 7 ஆண்டு சிறை

ஈரோடு, அக். 16–

ஈரோடு மாவட்டம் பவானிசாகர் தொட்டம்பாளையம் தேவாங்கபுரத்தை சேர்ந்த கூலி தொழிலாளி வெள்ளியங்கிரி, 55; கடந்த, 2025 பிப்.,6ல் மளிகை கடை ஒன்றின் முன் ஏழு வயதான இரு சிறுமிகள் விளையாடி கொண்டிருந்தனர். அப்போது குடிபோதையில் வந்த வெள்ளியங்கிரி, சிறுமிகளின் கையை பிடித்து இழுந்து பாலியல் சீண்டலில் ஈடுபட்டுள்ளார். சிறுமிகள் தங்கள் பெற்றோரிடம் தெரிவித்தனர். இதுகுறித்து பவானிசாகர் போலீசில், அவர்கள் புகார் செய்தனர். போலீசாருக்கு 'சிசிடிவி' மூலம் ஆதாரம் கிடைத்தது. இதனால் போக்சோவில் வழக்குப்பதிந்து வெள்ளியங்கிரியை கைது செய்தனர்.

இவ்வழக்கு ஈரோடு மகிளா விரைவு நீதிமன்றத்தில் நடந்தது. வழக்கில் நீதிபதி சொர்ணகுமார் நேற்று தீர்ப்பளித்தார். வெள்ளியங்கிரிக்கு ஏழாண்டு சிறை தண்டனை, 10 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்து தீர்ப்பளித்தார். பாதிக்கப்பட்ட சிறுமிகளுக்கு தலா, 50 ஆயிரம் ரூபாய் நிவாரண தொகை வழங்க அரசுக்கு பரிந்துரைத்தார்.

செய்திகள் சில வரிகளில்

துாத்துக்குடியை சேர்ந்த எம்.ஜி.எம்., நிறுவனத்திடம் இருந்து, 80 லட்சம் லிட்டர் பாமாயில் கொள்முதல் செய்ய, செப்., 29ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுக்கு, சென்னை உயர் நீதிமன்றம் இடைக்கால தடை விதித்துள்ளது.

ராமநாதபுரம் மாவட்டத்தில் முடங்கியுள்ள உப்பூர் அனல் மின் திட்டத்தை அங்கேயே தொடரலாமா; வேறு இடத்திற்கு மாற்றலாமா என்பதை ஆய்வு செய்யும் பணியை, தனியார் நிறுவனத்திடம் மின் வாரியம் ஒப்படைத்துள்ளது.

மயிலாடுதுறை மாவட்டம், சித்தர்காடு கிராமத்தில் செயல்பட்டு வரும் நவீன அரிசி ஆலையை எதிர்த்து, சுடுகாட்டில் போராட்டம் நடத்த அந்த கிராமத்தினருக்கு அனுமதி அளித்து, சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சித்தர்காடு கிராமத்தில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தின் நவீன அரிசி ஆலையால், கடும் மாசு ஏற்படுவதால், போராட்டம் நடத்த அனுமதி வழங்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரித்த உயர் நீதிமன்றம், இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

தமிழ்நாடு மின் பகிர்மான கழகம்
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு

ஒப்பந்த விவரக் குறிப்பீடு எண்	ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர்	பணியின் பெயர்
23	CE / IT-RAPDRP	Establishment Supply and Implementation of a Centralized E-Command Centre with Agentic AI for 5Y

மின்னணு ஒப்பந்தப்புள்ளிகளின் (e-tender) பணி / பொருட்கள் சமர்ப்பிக்கும் / திறக்கப்படும் கடைசி நாள் மற்றும் இணையதளத்தில் காண பதிவிறக்கம் செய்யும் நாள் / நேரம் போன்ற முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட இணையதளங்களை காணவும்: www.tnpdcl.org, www.tenders.tn.gov.in,www.tntenders.gov.in
செ.ம.தொ.இ/3154/ஒப்பந்தப்புள்ளி/2026

தமிழ்நாடு அரசு
வேலூர் மாநகராட்சி - மாநகராட்சி அலுவலகம், வேலூர்
ந.க.எண் : 10011/2026/E2 — மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை — நாள் : 12.10.2026
வேலூர் மாநகராட்சி ஆணையாளர் அவர்களால் கீழ்கண்ட பணிக்கு இரு உறை முறையிலான மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. (e-tendering system).

1.	வேலையின் பெயர்	ஒப்பந்தப்புள்ளி காப்புத் தொகை ரூபாய்	பணி முடிக்க வேண்டிய காலம்
	வேலூர் மாநகராட்சி, General Fund 2026-27-ன் கீழ் நவீன சாலைகள் மற்றும் நடைபாதைகள் (People Friendly Modern Streets), குழந்தைகளின் பாதுகாப்பை உறுதிசெய்யும் சாலை வசதிகள் (Safe Access to Schools) மற்றும் சாலை சந்திப்புகளை மேம்படுத்தும் பணிகள் (Improvement of Traffic Islands) Detail Project Report (DPR) தயார் செய்து சமர்ப்பித்தல் பணி		
i	Prepare DPR for Pedestrian Friendly Street Projects, Safe Access to School, Complete Streets & Junction Improvements in Vellore Corporation.	50,000/-	30 நாட்கள்
2.	ஒப்பந்தப்புள்ளி நமூனா விலை, வழங்கப்படும் நாள், நேரம்	ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் நமூனா 16.10.2026 முதல் 03.11.2026-ம் தேதி பிற்பகல் 3.00 மணி வரை https://tntenders.gov.in என்ற இணையதளத்திலிருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.	
3.	ஒப்பந்தப்புள்ளி படிவம் சமர்ப்பிப்பதற்கான இறுதி தேதி, நேரம் மற்றும் இடம் (இணையதளம் வழியாக மட்டுமே) சமர்ப்பிக்கப்பட வேண்டும்	03.11.2026-ம் தேதி பிற்பகல் 3.00 மணி வரை https://tntenders.gov.in இணையதளத்தில் மட்டுமே E.Token பயன்படுத்தி பதிவேற்றம் செய்து ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்கப்பட வேண்டும்.	
4.	ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள், நேரம் மற்றும் இடம்	03.11.2026-ம் தேதி பிற்பகல் 3.30 மணி, வேலூர் மாநகராட்சி அலுவலகம், மாநகராட்சி பொறியாளர் அறை.	
5.	ஒப்பந்தப்புள்ளி நமூனா பெறுதல் மற்றும் இதர விவரங்கள் தெரிந்து கொள்ளுதல்	https://tntenders.gov.in என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பை பார்த்து தெரிந்துகொள்ளலாம் அல்லது அலுவலக வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் பொறியியல் பிரிவில் கேட்டு தெரிந்து கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாள் அன்று அலுவலகத்திற்கு விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டால், அதற்கடுத்த பணி நாளில் அதே நேரத்தில் அதே இடத்தில் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு திறக்கப்படும். ஒப்பந்தப்புள்ளியினை காரணம் ஏதும் தெரிவிக்காமல் ஏற்கவோ நிராகரிக்கவோ அல்லது ஒப்பந்தப்புள்ளியினை ரத்து செய்யவோ ஆணையருக்கு முழு அதிகாரம் உண்டு.	

தொடர்புக்கு : தொலைபேசி எண் : 0416 - 2220578 — செ.ம.தொ.இ/ 3157 /ஒப்பந்தப்புள்ளி/2026 — ஆணையாளர், வேலூர் மாநகராட்சி

என்எல்சி இந்தியா லிமிடெட்
('நவரத்னா' இந்திய அரசு நிறுவனம்)
பதிவு அலுவலகம்: எண்: 135, ஈவேரா. பெரியார் நெடுஞ்சாலை, கீழ்ப்பாக்கம், சென்னை- 600 010
தலைமை அலுவலகம் : வட்டம் - 1, நெய்வேலி - 607 801, கடலூர் மாவட்டம், தமிழ்நாடு
CIN : L93090TN1956GOI003507 / இணையதளம்: www.nlcindia.in

Advt.No.: L&DC/04/2026

NLCIL - ல் தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள்
தொழில் பழகுநர் பயிற்சிக்கு ஓர் அரிய வாய்ப்பு

இந்திய அரசு பொதுத்துறை நிறுவனமான NLC இந்தியா நிறுவனத்தில், தொழில் பழகுநர் சட்டம் – 1961 ன் விதிகளுக்குட்பட்டு கீழ்க்கண்ட பிரிவில் தொழில் பழகுநர் பயிற்சிக்கு 31.10.2026 அன்று 18 வயது பூர்த்தியடைந்த தகுதியுள்ள தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி மாநிலத்திலுள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் www.nlcindia.in என்ற அதிகாரப்பூர்வ இணையதளத்தில் online வழியாக மட்டுமே வரவேற்கப்படுகின்றன.

TRADE APPRENTICES:

வ. எண்	பிரிவு	பயிற்சி இடங்களின் எண்ணிக்கை	கல்வித்தகுதி	மாதாந்திர உதவித்தொகை	பயிற்சியின் கால அளவு
1	Fitter	125	அரசால் அங்கீகரிக்கப்பட்ட ITI-யில் கைவினைஞர் பயிற்சியில் தேர்ச்சி	Rs.12,000/- மாதத்திற்கு	12 மாதங்கள்
2	Turner	45			
3	Mechanic (Motor Vehicle)	110			
4	Electrician	125			
5	Wireman	110			
6	Mechanic (Diesel)	5			
7	Stenographer	20			
8	Welder	120			
9	COPA (Computer Operator and Programming Assistant)	30			
10	Refrigeration and Air Conditioning Mechanic	10			
	TOTAL	700			

NON ENGINEERING GRADUATE APPRENTICES:

வ. எண்	பிரிவு	கல்வித்தகுதி	பயிற்சி இடங்களின் எண்ணிக்கை	மாதாந்திர உதவித்தொகை	பயிற்சியின் கால அளவு
1	Commerce	B.Com	70	Rs.14,174/- மாதத்திற்கு (of which Rs 6150/- and will be paid by Government as DBT)	12 மாதங்கள்
2	Business administration	BBA	72		
3	Computer Science	BSc. Computer Science	93		
4	Computer Application	BCA	45		
5	Geology	BSc. Geology	14		
6	Micro Biology	BSc. Micro Biology	5		
7	Chemistry	BSc. Chemistry	26		
8	Pharmacist (Allopathy)	B.Pharm (Allopathy)	3	Rs.16,678/- மாதத்திற்கு (of which Rs 6150/- and will be paid by Government as DBT)	
9	Pharmacist (Ayurveda)	B.Pharm (Ayurveda)	3		
10	Nursing	BSc. Nursing	36		
	TOTAL		367		

www.nlcindia.in >>> CAREER >>> TRAINEES AND APPRENTICES>>>Advt.No. L&DC/04/2026

குறிப்பு:
1. பயிற்சி தேர்வுமுறை குறித்து விண்ணப்பதாரர்களுடன் கடிதப்போக்குவரத்து எதுவும் நடைபெறாது.
2. பயிற்சிக்கு தேர்வு செய்யப்பட்டவர்கள் குறித்தான தகவல்களுக்கு விண்ணப்பதாரர்கள் அனைவரும் தொடர்ந்து இணையதளத்தை பார்த்து தெரிந்து கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.
3. இப்பயிற்சி பெறுவதன் மூலம் NLCIL ல் நிரந்தர வேலை வாய்ப்பிற்கான உத்திரவாதம் ஏதும் இல்லை என அறிவிக்கப்படுகிறது.
4. இணையவழி விண்ணப்பம் தொடங்கும் தேதி : 21-10-2026 காலை 10 மணி முதல்
5. இணையவழி விண்ணப்பம் முடிவடையும் தேதி : 09-11-2026 மாலை 5 மணி வரை

-Sd-/
பொது மேலாளர்,
கற்றல் மற்றும் மேம்பாட்டு மையம்,
என்.எல்.சி இந்தியா நிறுவனம்

பாண்டிச்சேரி கிளை
Bank of Baroda — 119 FOUNDATION YEAR LEADING WITH TRUST
நெ.58-60, ரவிகிருஷ்ணா இன், வெள்ளாழ தெரு, பாண்டிச்சேரி-605 601.
போன் : 0413-2336812, Mail ID: pondic@bankofbaroda.bank.in

(baanknet போர்ட்டலில் நடத்தப்படும் ஏலத்திற்கான செய்தித்தாள்களில் வெளியிடப்படும் சுருக்கமான விற்பனை அறிவிப்பு)

அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின் ஏல விற்பனை அறிவிப்பு

பிற்சேர்க்கை IV-Aயின்படி (விதி 6(2) மற்றும் 8(6)யை பார்க்கவும்)
2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் அமலாக்கச்சட்டம் விதிகளின் கீழ் 6(2) மற்றும் 8(6) இன் கீழ் வைக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்களை மின் ஏலம் மூலம் விற்பனை செய்தல் அறிவிப்பு.

கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் ஆகியோருக்கு குறிப்பாகவும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிட்டுள்ள சொத்துக்களை **பாங்க் ஆஃப் பரோடா வங்கி**யின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் சுவாதீனம் செய்யப்பட்ட கீழே உள்ள சொத்துக்கள் **''எங்கு உள்ளதோ அப்படியே'' ''எப்படி உள்ளதோ அப்படியே''** மற்றும் **'' என்ன இருக்கிறதோ அதே நிலையில்''** என்ற அடிப்படையில் வங்கியில் பெறப்பட்ட கடனுக்காக கீழே குறிப்பிட்டுள்ள கடன் மற்றும் செலவுகளை திரும்பப் பெறும் நோக்கத்துடன் மின் ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் விபரம், நிலுவைத் தொகை விபரம், சொத்து விபரம் குறைந்தபட்ச கேட்பு விலை, மின்னணு ஏலத் தேதி மற்றும் நேரம், டேவணித் தொகை மற்றும் ஏல அதிகரிப்பு தொகை ஆகியவை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் பெயர்கள் மற்றும் முகவரி : M/s.ஆரஞ்ச் மொபைல், உரிமையாளர் திருமதி.விஷ்னுப்பிரியா த/பெ. திரு. பெருமாள், நெ.392, அண்ணா சாலை, பாண்டிச்சேரி - 605001. மற்றும் திருமதி.விஷ்னுப்பிரியா த/பெ. திரு. பெருமாள், நெ.3, பெரிய கிணற்றுத் தெரு, சின்னையாபுரம், பாண்டிச்சேரி - 605003.

Loan A/c.No.05640400044002,
நிலுவை தொகை ரூ.22,72,484.29/- மேலும் 04.10.2026 அன்று முதல் வட்டி மற்றும் இதர கட்டணங்கள்.

அசையாச் சொத்தின் சுருக்கமான விவரங்கள் மற்றும் ஏதேனும் வில்லங்கங்கள் இருப்பின்

கடலூர் மாவட்டம், புவனகிரி தாலுக்கா, சிதம்பரம் பதிவு மாவட்டம், பரங்கிப்பேட்டை சார்பதிவு மாவட்டம், அரியகோஸ்டி ஊராட்சி, அரியகோஸ்டி கிராமத்தில் மனைப்பிரிவுகளாக பிரிக்கப்பட்ட புஞ்சை நிலத்தின் அளவு 2.79 ஏக்கர்ஸில் அமைந்துள்ள 'ராஜா நகர்' என்று பெயரிடப்பட்ட மனைப்பிரிவில் நான்கு காலி மனைகள். இதன் ரிசர்வே. நெ. 187/7.

I) **மனை எண் 79:** கிழக்கு முதல் மேற்கு 58 அடி, தெற்கு முதல் வடக்கு 20 அடி. இதன் மொத்தப் பரப்பளவு 1160 சதுர அடி அல்லது 107.76 சதுர மீட்டர். **நான்கு எல்லைகள்:** மனை எண்கள். 76,77,78க்கு தெற்கு, 24 அடி அகல தெற்கு வடக்கு நகர் சாலைக்கு கிழக்கு, மனை எண். 80க்கு வடக்கு, மனை எண் 72க்கு மேற்கு.

நிர்ணயிக்கப்பட்ட விலை ரூ. 3,76,200/- | டேவணித் தொகை ரூ. 37,620/- | ஏல உயர்வு தொகை ரூ. 10,000/-

II) **மனை எண் 80:** கிழக்கு முதல் மேற்கு 58 அடி, தெற்கு முதல் வடக்கு 20 அடி. இதன் மொத்தப் பரப்பளவு 1160 சதுர அடி அல்லது 107.76 சதுர மீட்டர். **நான்கு எல்லைகள்:** மனை எண். 79க்கு தெற்கு, 24 அடி அகல தெற்கு வடக்கு நகர் சாலைக்கு கிழக்கு, மனை எண். 81க்கு வடக்கு, மனை எண் 71க்கு மேற்கு.

நிர்ணயிக்கப்பட்ட விலை ரூ. 3,76,200/- | டேவணித் தொகை ரூ. 37,620/- | ஏல உயர்வு தொகை ரூ. 10,000/-

III) **மனை எண் 81:** கிழக்கு முதல் மேற்கு 58 அடி, தெற்கு முதல் வடக்கு 20 அடி. இதன் மொத்தப் பரப்பளவு 1160 சதுர அடி அல்லது 107.76 சதுர மீட்டர். **நான்கு எல்லைகள்:** மனை எண். 80க்கு தெற்கு, 24 அடி அகல தெற்கு வடக்கு நகர் சாலைக்கு கிழக்கு, மனை எண். 81Aக்கு வடக்கு, மனை எண் 70க்கு மேற்கு.

நிர்ணயிக்கப்பட்ட விலை ரூ. 3,76,200/- | டேவணித் தொகை ரூ. 37,620/- | ஏல உயர்வு தொகை ரூ. 10,000/-

IV) **மனை எண் 81A:** கிழக்கு முதல் மேற்கு 58 அடி, தெற்கு முதல் வடக்கு கிழக்கில் 30 அடி. மேற்கு 13 அடி என இதன் மொத்த பரப்பளவு 1247 சதுரடி அல்லது 115.84 சதுர மீட்டர். **நான்கு எல்லைகள்:** மனை எண். 81க்கு தெற்கு, 24 அடி அகல தெற்கு வடக்கு நகர் சாலைக்கு கிழக்கு, சர்வே எண். 187க்கு வடக்கு, மனை எண்கள் 68,69க்கு மேற்கு. **சுவாதீன நிலை :** ஆக்கப்பூர்வமான

நிர்ணயிக்கப்பட்ட விலை ரூ. 4,04,100/- | டேவணித் தொகை ரூ. 40,410/- | ஏல உயர்வு தொகை ரூ. 10,000/-

மின் ஏல தேதி மற்றும் நேரம் 06.11.2026 அன்று மதியம் 2.00 மணி முதல் 6.00 மணி வரை வரம்பற்ற 10 நிமிட அவகாசத்துடன் மின் ஏலம் நடைபெறும்

சொத்தினை பார்வையிடும் தேதி : 26.10.2026 (நேரம் காலை 10.30 மணி முதல் மாலை 3.30 மணி வரை)
டேவணித் தொகை செலுத்துவதற்கான கடைசி நாள்: 06.11.2026

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு **https://www.bankofbaroda.bank.in/e-auction** மற்றும் **baanknet.com** என்ற இணையதள இணைப்பை பார்க்கவும்/வருகைதரவும். மேலும் ஏலதாரர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய அங்கிகரிக்கப்பட்ட அதிகாரி செல் : 9329611020 & 9515024578 தொடர்பு கொள்ளலாம்.

தேதி : 15.10.2026
இடம் : பாண்டிச்சேரி
அதிகாரப்பூர்வ அலுவலர், முதன்மை மேலாளர்/ பேங்க் ஆஃப் பரோடா